





என்ன வேண்டும்? - பழம் வேண்டும்
என்ன பழம்? - வாழைப்பழம்
என்ன வாழை? - கப்பல் வாழை
என்ன கப்பல்? - பாய்க் கப்பல்
என்ன பாய்? - ஓலைப் பாய்
என்ன ஓலை? - பனை ஓலை
என்ன பனை? - கட்டைப் பனை
என்ன கட்டை? - மரக் கட்டை
என்ன மரம்? - பூ மரம்
என்ன பூ? - மல்லிகைப் பூ
என்ன மல்லிகை? - கொடி மல்லிகை
என்ன கொடி? - பழக்கொடி
என்ன பழம்? - வாழைப்பழம்



குறிப்பு: * இவ்வினா மாலைச் செயற்பாட்டில் மாணவரை இருவர் இருவராக ஈடுபடுத்துக.
* இதனை ஒத்த வினா மாலையை மாணவர் சுயமாக உருவாக்கச் செய்யவும்.